# இசை மகிழ்ச்சியை அளிக்கிறது. இசைப்பயிற்சியை மேம்படுத்துங்கள்







நீ பாட விரும்புகிறாய், தனியாகவோ அல்லது சேர்ந்தோ? உனது கனவு இசைக்கருவியொன்றை பயில வேண்டும், ஓர் இசைக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டும்? நீங்கள் உங்கள் குழந்தைக்கு இசைக்கல்வியை ஊட்ட விரும்புகிறீர்கள்?

# இசைப்பாடசாலையில் எல்லா விதமான மனிதர்களும் இசை பயிலலாம்.



VMS எனப்படும் சுவிஸ் கூட்டு இசைப்பாடசாலையில் இணைந்து ஏறத்தாள 400 பாடசாலைகள் எல்லா விதமான இசைப்பயிற்சிகளையும், கிளாசிக்கல் இசை, றொக், பொப் மற்றும் ஜாஸ் மற்றும் பன்னாட்டு நாட்டுப்புறப்பாடல்கள் வரை வழங்குகிறது.

நீங்கள் உங்களின் வதிவிட இசைப்பாடசாலையில் பலதரப்பட்ட இசைக்கருவிகள் மற்றும் இசைப்பயிற்சிகள் சம்பந்தமாக கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

VMS சுவிஸ் கூட்டு இசைப்பாடசாலையில் இணைந்து செயற்படும் பாடசாலைகளின் பட்டியலை இங்கு காணலாம்: www.musikschule.ch/de/musikschule/musiklernen

## சுயமாக இசை பயில வேண்டும் என்ற எனவு விருப்பத்தை எவ்வாறு நிறைவேற்றலாம்?

- உங்களின் கெமைன்டேயில் உள்ள இசைப்பாடசாலையை தேடுங்கள்
- அந்த இசைப்பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்
- உங்களுக்கு உகந்ததொரு இசைத்துறையை தெரிவுசெய்யுங்கள்

உங்கள் அருகில் உள்ள VMS இசைப்பாடசாலையை இங்கு காணலாம்

## இசைப்பாடசாலைகள் எதனை வழங்குகின்றன?

- இசை சார்ந்த கல்வி
- கலாச்சார பன்முகத்தன்மை
- இசையின் வெவ்வேறு பரிமாணங்கள்
- தனிப்பட்ட விருப்புச்சலுகைகள்
- உயர் நிபுணத்துவக்கல்வி

போன்றவற்றை இசைக்கருவிகள் மற்றும் பாடற்பயிற்சி, தனித்து, இணைந்து, குழந்தைகளுக்கு, இளையோர் மற்றும் பெரியோர்களுக்கான பிரிவுகளில் வழங்குகின்றன.

## இசைக்கல்வியின் மூலம் எவை ஊக்குவிக்கப்படுகின்றன?

- படைப்பாற்றல்
- சமூக உணர்வு
- சுய முயற்சி
- தன்னம்பிக்கை